காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

12—12—71

★

உள்ளே......

"வெல்வோம்;
வாழ்வோம்!"
(தலையங்கம்)

நெருப்பி
லிடலாமா...?
(மொழிக் கட்டுரை)

முடிந்தால்
மறுத்துப் பார்!
(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி
(தொடர்கதை)

விலை 25 காசு



சென்னை மாநகராட்சியின்
மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் அவர்களும்,
துணைமேயர் என். வி. என். சோமு அவர்களும்

தமிழ்ச் சிங்கம்—நம தங்கம்!

(பாவலர். கருமலைப் பழம்நீ.)

அண்ணாவின் எண்ணமடி பெண்ணே!—தமிழ்
மண்ணெங்கும் முன்னேற்றம் கண்ணே!—தன்

வாழ்நாளை தாழ்ந்திருக்கும்
ஏழைக்குத் தானளித்த

தாமே!—உயர்ந்
தோமே!

தென்னாட்டு காந்தியடி மானே!—அவன்
அன்புள்ளம் தாயுள்ளந் தானே!—புதுக்

காட்டாற்று வெள்ளமென
சொல்லாற்றல் கொண்டபெரும்

நாவே!—தமிழ்க்
காவே!

நாடாள வந்ததமிழ் மன்னன்!—புவி
நல்லாட்சி வித்திட்டுச் சென்றான்!—அவன்

தன்பின்னே தம்பிகளை
மன்னன்நல் லாட்சிபெற

கண்டான்—சயங்
கொண்டான்!

அண்ணாவின் கொள்கையடி தேனே!—அது
மண்ணாளும் இந்நாளில் தானே!—நம்

அண்ணாவின் தம்பிமனம்
விண்பூத்த வெள்ளிநில

வாகும்—இருள்
போகும்!

எங்கும்முன் னேற்றநிலை கண்டாய்!—தனிச்
சிங்கார பொன்னாடு கொண்டாய்!—அலை

ஆர்க்கின்ற வங்ககடல்
ஓரத்தில் துஞ்சும்தமிழ்

சிங்கம்!—நம
தங்கம்!



காஞ்சி

நிறுவனர்: அண்ணுதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 12—12—71 | இதழ் 22

“வெல்வோம்; வாழ்வோம்!”

மனிதனை மனிதன் பகைத்துக் கொள்வது அநாகரிகம் என்கிறோம். ‘பகைவனுக்கு அருள்வாய் நன் நெஞ்சே’ என்று நெஞ்சுக்கு அறிவுரை கூறிய சான்றோர் பலர். பல்லுக்குப் பல், இரத்தத்திற்கு இரத்தம், உயிருக்கு உயிர் என்று பதிலுக்குப் பதில் பெற்றுவந்த காலம் ஒன்று இருந்தது. மனிதனுக்கும் விலங்குக்கும் அறிவால் மட்டும் அல்லாது உடலாலும் மிகுதியான வேறுபாடு இல்லாதிருந்த காலம் அது. அன்றிருந்த நிலை இன்று எவ்வளவோ மாறியுள்ளது. இன்று மனிதன் நாகரிகம் பெற்றிருக்கின்றான். உடல் ஆற்றலைவிட அறிவாற்றலை மிகுதியாக நம்பவேண்டிய நிலை உருவாகியுள்ளது. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டவேண்டும் என்ற ஏசுவின் பொருளுரையைப் பலர் புரிந்துகொள்கின்றனர். எனினும் சிற்சில நேரங்களில் கோபம் முன்வருகின்றது. நெஞ்சு பொறுக்கமாட்டாது நிலைகுலைந்து போகவேண்டி வருகின்றது. ‘தீமையை மோதி மிதித்துவிடு பாப்பா’ என்று பாரதியார் கூறியதை நாம் செயல்படுத்த எண்ணுகின்றோம்.

> சென்ற முறை பாகிஸ்தான், இந்தியாமீது போர் தொடுத்தபோது **அறிஞர் அண்ணு** அவர்கள், 12-9-65-இல் ‘காஞ்சி’யில் எழுதிய தலையங்கம் இது. இப்போதும் எவ்வளவு பொருந்தி இருக்கிறது!

தனி மனிதன் நிலைபோல்தான் ஒரு நாட்டின் நிலையும் ஆகும். இன்று உலகம் அத்தனையும் ஒரு குடும்பம் என்ற எண்ணம் பரவியுள்ளது. மனிதன் கண்டிருக்கும் அறிவுக் கருவிகள் உலகத்தைச் சுருக்கிவிட்டிருக்கின்றன. ‘குற்றாலத்திலே இடிஇடித்தால் கோயம்புத்தூரில் மழை பெய்வது’ முன்பெல்லாம் விநோதமானதாக இருந்திருக்கும். ஆனால் இன்றே அமெரிக்காவில் இடி யிடித்தால், ஆசியாவில் மழை பொழிகின்றது. குளத்து நீரில் போடும் கல், குளம் முழுவதையும் அலைகளால் மூடுவதைப்போல் எங்கோ நடக்கும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளும் உலகத்தின் வாழ்க்கையில் குறுக்கிடுகின்றன. அந்த அளவுக்கு உலகம் ‘குடும்பம்’ ஆகியிருக்கும் காலம் இது. இந்தக் காலத்தில் ஒரு நாடு இன்னொரு நாட்டோடு பகைகொள்வது ஆகாது; இரு தரப்பினர்க்கும் அது கேட்டையே தரும். போர்ச் செலவே நாட்டு வருவாயில் பெரும் பகுதியைப் பறித்துக்கொள்ளும். அதனால் உலகத்து நாடுகள் அத்தனையும் ஒன்றேடொன்று கைகொள்ளாமல் பண்போடு — நண்போடு— நடந்துகொள்ள வேண்டும் என்று நல்லவர்கள் எண்ணுகின்றனர்.

இந்தியா அத்தகையதொரு எண்ணங்கொண்ட நாடு என்பதை உலகம் அறிந்திருக்கிறது. போர் அற்ற ஒரு நிலையை உலகத்து மக்கள் அனைவரினும் அதிகமாக விரும்புகின்றவர்கள் இந்திய மக்களே, காலங்காலமாக நமது எண்ணம் போரற்றதொரு நிலைமையிலேயே உருவாகிவந்தமையால் போரிடுவது நம் மக்களுக்குத் தெரியாதோ என்றுகூட பலர் கருதிவிட்டனர். அதனல் அண்டை நாடுகளான பாகிஸ்தானும் சீனவும் நமது எல்லையில் கால் வைத்துச் சொந்தம் கொண்டாடத் தலைப்பட்டன.

சீன பகைகொண்டதை எண்ணும்போது பதைப்பு மிகுதியாகும். இந்தியரும் சீனரும் உடன் பிறந்தவர்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டு வந்தது. உலகப் பெருமன்றமான ஐக்கிய நாடுகள் அவையில் சீனவுக்கு இடம் அளிக்கவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வந்தது. இப்படி இருந்த நிலைமைகளை எல்லாம் மறந்து பேராசைமிக்கு, சீன இந்திய மண்ணைக் கைக்கொள்ள முயன்றபோது, இந்தியா அதைத் தடுத்து—மண்ணைக் கௌவச் செய்தது. சீன பெற்ற பாடத்தைப் பெற இன்று பாகிஸ்தான் விரும்புகின்றது.

பாகிஸ்தான் என்பது இன்று தனி நாடாக இருந்தாலும் நேற்று நம்முடைய நாடாக இருந்ததுதான் அது. இன்னமும் பாகிஸ்தானில் இந்தியர்க்கு உறவினர்களும், இந்தியாவில் பாகிஸ்தானிர்க்கு உறவினர்களும் இருக்கிறார்கள். சீனவும் இந்தியாவும் வேறு வேறு விதமான பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்ட நாடுகள். ஆனல் பாகிஸ்தான் அப்படி அல்ல; ஒரே குடும்பத்துப் பிள்ளைகள் பாகப்பிரிவினை செய்துகொண்டதைப்போல் 1947-ல் தனித்துச் சென்ற நாடு. நண்பர்கள் இருகைகளாலும் அணைத்துக் கொள்வதைப் போல், இந்தியாவின் இருபக்கங்களும் பாகிஸ்தானின் பகுதிகள் இருக்கின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பல வகையில் ஒன்றுபட்டு நின்று, ஒற்றுமையோடு வாழ்ந்து வளரவேண்டிய நாடுகள் ஆகும்.

ஆனல் என்ன காரணத்தினலோ பாகிஸ்தான் நட்புகொள்வதற்குப் பதிலாகப் பகைகொள்ளுகிறது. நட்பு நாடி நீட்டும் கரத்தைத் தட்டிவிடுகிறது. எத்தனை விதங்களில் தன் பகைமையை வெளிப்படுத்த இயலுமோ அத்தனை விதங்களில் வெளிப்படுத்துகின்றது. பகைகொண்டதோடு அமையாமல் இன்று படைகொண்டு இந்தியாவின்மீது பாய்ந்திருக்கிறது. இந்திய மண்ணிலே வாழ்கின்ற மக்களுக்கு அறைகூவல் விடுவதுபோல் அதன் செய்கை அமைந்துள்ளது.

போரில் பாகிஸ்தான் வெற்றி பெறுவது என்பது முயற்கொம்பே! எனினும் போர்வீரர் என்ற காரணத்தினற்போலும் ‘நாம் போரிலே ஈடுபட்டிருக்கிறோம்’ என்று சர்வாதிகாரி அயூப் அறிவித்துவிட்டார். தோழமையை மறந்து, தொடர்புகளை மறந்து, உறவை மறந்து, பழைமையை மறந்து, பண்பை மறந்து, ‘போர், போர்’ என்று அந்தத் தளபதி அறிவித்திருக்கின்றார், இந்தியாவுக்குச் செல்லவேண்

டிய இந்தியக் கப்பல்களைக் 'கைது' செய்து வைத்திருக்கின்றார். இந்தியாவில் தன் ஒற்றர்களை நடமாட விட்டுத் தகவல்களைச் சேர்க்க முயலுகின்றார். செய்வது இத்தனையும் செய்துவிட்டு உலக அரங்கிலே சென்று "நாங்கள் மிகவும் யோக்கியர்கள்; இந்தியா தான் அக்ரமமான வகையில் போர் தொடுத்திருக்கிறது" என்று பொய்ச்சரடுவிடச் சொல்கின்றார். அயூப்கான் சிறந்த போர்த் தளபதியாக இருக்கலாம்; போர் முறைகளை, முனைகளை அறிந்தவராக இருக்கலாம்; ஆனால் அவர் மேற்கொண்டுள்ளதோ நீதியற்றதொரு காரணத்திற்கான போர்! நியாயம் துளியும் அற்ற போர் அவர் தொடுத்திருப்பது. ஆற்றல் ஆயிரம் இருப்பினும் அக்ரமம் எப்படி வெல்லும்? இதை அயூப் அறியார் என்று நினைக்கத் தோன்றவில்லை. அறிந்தும் ஆணவம் காரணமாக வென்று விடுவோம் என்ற வீண் வீராப்பினால் படைகொண்டு பாய்கின்றார்.

நமக்கு இது ஒரு அறைகூவல்! நாம் ஏற்றுக் கொண்டுவிட்டோம்; நாமாகப் போருக்குப் போவது இல்லை. வந்த போரையும் விடுவதாக இல்லை. நாம் தாக்குவது இல்லை; தாக்கியவர்களைத் தப்பவிடுவதும் இல்லை. இந்தியா சமாதானத்தை விரும்புகின்றது என்பதால் அதற்குப் போரிடத் தெரியாது என்பதல்ல; நாம் அகிம்சையில் நாட்டம் கொண்டவர்கள் என்பதால்; அக்ரமத்தைச் சகித்துக்கொள்வோம் என்பதல்ல; அண்டைநாட்டுக்காரர்களிடம் அன்போடு வாழுவோம் என்றால், அவர்கள் சண்டையை அனுமதிப்போம் என்பதல்ல பொருள்.

போரிடத் தெரிந்துதான் நாம் பொறுமை பற்றிப் பேசுகின்றோம்; வீரர்கள் தீரர்களாக இருந்தும் வீண் போர் எதற்காக என்கிறோம்; எந்தவிதமான எதிர்ப்பையும் தாங்கிக்கொள்ள ஆற்றல் பெற்றிருந்துதான் அமைதியைப் பற்றிப் பேசுகின்றோம். இதனைச் சீனர்களுக்கு உணர்த்தியுள்ளோம். உணர்ந்திருக்கும் பாகிஸ்தானியர்கள் மறந்திருக்கிறார்கள் போலும்! மறதி கொடியது என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம்!

"பங்களா தேஷ்"

இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொடுத்த 'பங்களா தேஷ்' போராட்டம், பயன்பெற்று விட்டது.

இந்தியா, 'பங்களா தேஷை'—ஒரு நாடு என்று ஏற்றுக்கொண்டு, தன் புகழை நிலை நாட்டிக் கொண்டு விட்டது.

அடுத்து, பூடானும், ஏற்றுக்கொண்டது.

விரைவில் இன்னும் பல நாடுகளும் ஏற்கலாம்!

எத்தனை தித்திக்கும் சேதி இது.

வெற்றி கொள்வீர்!

(கருமலைப்பழம்நீ)

★

போரெங்கே? போரெங்கே? என்றே நாளும்
பூரித்த குன்றுநிகர் தோளுக் கின்று
சீர்மிக்க வாய்ப்பொன்று வந்த தாலே
சிங்கத்தாய் பெற்றெடுத்த இளஞ்சிங் கங்காள்!
ஆர்த்தெழுவீர்! அரைநொடியில் வெற்றி கொள்வீர்!
அகந்தையால் அறிவிழந்த பாகிஸ் தானின்
வேரறுப்பீர்! வங்கத்து மக்கள் ஆட்சி
மேடையிட புறப்படுவீர்! ஆண்மை மிக்கீர்!

இந்தியப் பேரரசு தன் நிலைமையைத் தெளிவு படுத்திவிட்டது. பணிய வேண்டியது, போர் நிறுத்தம் செய்ய வேண்டியது, ஊடுருவல்காரர்களைத் திரும்பப் பெறவேண்டியது பாகிஸ்தானின் கடமை என்பதை உணர்த்திவிட்டது. உலக நாடுகள் நீதியை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றன; ஐக்கிய நாடுகள் அவையின் செயலாளர் ஊதாண்ட் அவர்கள் வருகின்றார். அவருடைய முயற்சி வெற்றி பெற்று போர் நின்று சமாதானம் ஏற்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். போரிட்டே தீர வேண்டும் என்ற நிலையில் நாம் இல்லாமையால் போர் நிறுத்த முயற்சி வெற்றி பெறவேண்டும்—உலகில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் மற்ற யாரினும் பெரிதும் வேட்கையுடையவர்கள்தாம் நாம். அதனால் நீதி நிலை நிறுத்தப் பெற்று, நிம்மதியான வாழ்க்கையை மக்கள் அடையவேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் கொண்டுள்ளோம்.

போர் நிலை எவ்வாறு ஆயினும்—நாம் எதற்கும் தயார் என்பதைப் பிறர் புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். நாட்டின் பல்வேறு வாழ்க்கைத் துறையில் உள்ளவர்களும் இதனை நன்கு உணர்ந்துள்ளனர். எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த நேரத்தில் அரசின் பக்கம் துணை நிற்கின்றோம் என்பதை உணர்த்தியுள்ளனர். நமக்குள்ளே ஆயிரமாயிரம் வேற்றுமைகள் இருக்கலாம். கொள்கையால் வேற்றுமை, கொள்கையைக் கொண்டு செலுத்தும் முறையால் வேற்றுமை என்று எத்தனையோ வேற்றுமைகள் இருந்து வருகின்றன. ஒருகால் இவ்வேற்றுமைகள் மிகுதியாயினும் ஆகலாம். ஆனால் இவ்வேற்றுமைகள் நம்மைப் பிரித்து வைக்க ஆற்றலற்றவையாகும். நாம் வேறுபட்டு நிற்பது நமது நாட்டுக்குள்ளேதான். அயலவர் வந்தபோதும் விலகி நிற்போம் என்று எவரேனும் கருதுவரேல் அது அறியாமையாகும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

[35]

சின்னவன் சிறைப்படுத்தினான்!

“இரத்தினாதேவி அவர்களை, நந்திமித்திரன் பிடித்துக்கொண்டு விட்டான் அரசே! நாங்கள் எவ்வளவோ முயன்றும், பயனில்லாமல் போய்விட்டது.” என்றான் மேனிவிடங்கன்.

அரசரும், அரசியாரும் ஒரே நேரத்தில் ‘ஐயோ இரத்தினா’ என்று அலறிவிட்டார்கள். தேவியாரின் தலை கிறுகிறுக்கத் தொடங்கிவிட்டது. தலையைப் பிடித்துக்கொண்டு மஞ்சத்தில் ஒருக்களித்து சாய்ந்து கொண்டு விட்டார்.

“வேட்டரையனால் தயாரிக்கப்பட்ட இந்த ஓலையையும் நாங்கள் அவனிடமிருந்து மீட்கவேண்டிய நிலையேற்பட்டு விட்டது பிரபு! நாங்கள் நந்திமித்திரனோடு வாட்போர் புரிய வேண்டியிருந்தது. வெளியே பயங்கரமான பேய் மழை! சூறைக் காற்று!! கொடுங் குளிர்!! இவற்றையெல்லாம் எதிர்க்க வேண்டியிருந்தது எங்களுக்கு. என்றாலும் வேட்டரையனைக் காப்பாற்ற முடியவில்லை. இரத்தினாதேவியையும் காப்பாற்ற முடியவில்லை. மன்னித்து விடுங்கள் அரசே!” என்று கூறி நின்றான் மேனிவிடங்கன்.

அவன் கூறியவைகளைக் கேட்டுக்கொண்டே மன்னர், பதிலேதும் சொல்லாமல், ஓலையைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.

திருப்பெருந் திரு பேரரசர் அவர்கள் சமுகத்துக்கு—

இங்கே நிலைமைகள் மிகவும் கனிந்து காணப்படுகிறது. போர் தொடுக்க இது அருமையானதொரு சந்தர்ப்பம். தீகவாபியில் தீசன், ஏறக்குறைய போருக்கு ஆயத்தமாகி விட்டான். பௌத்த மகாசபைக் கூட்டத்தின் முடிவை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது. தீசனது மன உறுதி எப்படியும் கமணனை வெற்றி கண்டுவிட முடியும் என்பதாக இருக்கிறது. கமணன், இன்னமும் மகாகாமாவுக்குத் திரும்பவில்லை. மகாசபைக் கூட்டத்துக்குக் கல்யாணியிலிருந்தபடியே செல்ல இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

ஒருகால், கூட்டம் முடிந்து நேராக மகாகாமா திரும்புவானானால், அவன் உடனடியாக தீசனுடன் பொருதத்தான் வேண்டியிருக்கும்.

தீசனுடன், அவன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் நமது படையெடுப்பும் நிகழுமானால், வெற்றியை சுலபமாகப் பற்றிக் கொள்ளலாம்.

அடுத்து நான் என்ன செய்யவேண்டும் என்பதற்கு தங்களது உத்திரவை எதிர்பார்க்கிறேன்.

வேட்டரையன்.

பி. கு. :- இங்கே நந்திமித்திரனது நிலை பரிதாபமாக இருக்கிறது. அரண்மனைக்கும் வருவதில்லை. கல்யாணிக்கும் செல்லவில்லை. நாளெல்லாம் நாய்போல குதிரை மீதேறிக் கொண்டு தெருத் தெருவாகத் திரிந்துகொண்டிருக்கிறான். என்னைப் பிடித்துவிட விரும்புவதாகத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன்பு, ஒரு செயற்கை நீர் வீழ்ச்சிக் கருகே என்னைக் கண்டுபிடித்துத் துரத்தினான். தப்பியது தங்களது புண்ணியத்தால் தான் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்,

இதுவரையில் நந்திமித்திரன், கமணனைச் சந்திக்கவே இல்லை என்பதையும் மன்னர் அவர்கள் சமூகத்துக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓலையைப் படித்து முடித்த பிறகும்கூட மன்னரிடம் எந்தச் சலனமும் ஏற்படவில்லை. போர் தொடுக்கக் கனிந்திருக்கும் காலம் பற்றிக்கூட அவர் நினைக்கவில்லை.

பாவம், உலகத்தின் இன்ப துன்பங்களைக்கூட சரியாகப் புரியாத ஒரு இளம்பெண்ணை ஒரு மிருகத்திடம் ஒப்படைக்கும்படியாகி விட்டதே என்று தன்னுள் எண்ணி வருந்தினார்.

மேனிவிடங்கனிடம், முதலமைச்சரை வரும்படிக் கூறிச் சொல்லிவிட்டுப் போகும்படிக் கூறினார் மன்னர். அவன் சென்றதும் தேவியிடம், ‘தேவி! மனு மன்னர் உயிரோடிருந்தால், இந்நேரம் நம் இரத்தினா சோழப் பேரரசின் அரசியாக வீற்றிருப்பாளே தேவி—அந்தப் பெண்தெய்வத்தை வீணாகப் பலிபீடத்துக்கு அனுப்பிவிட்டாயே தேவி” என்றார், கவலையுடன்!

“மன்னித்துவிடுங்கள் பிரபு, வேட்டரையனது முடிவை நான் இப்படி எதிர்பார்க்கவே இல்லை. நான் முன்பே குறிப்பிட்டதுபோல, என்னை இது போன்ற விவகாரங்களிலிருந்து முழுதுமாக விலகி இருக்கவும் அனுமதிக்க மறுக்கிறீர்கள், விளைவுகளின் விபரீதங்களுக்கான பழியிலிருந்தும் என்னால் தப்ப முடியவில்லை. இந்த வாழ்க்கையே எனக்கு வேண்டாம் பிரபு.” என்றாள் தியாகவல்லி தேவியார்.

வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால் மட்டுமே மன்னரால், தேவியார் இப்படி பேசியது கேட்டுச் சிரிக்க முடியும். இப்போது? இனிமேலும் மன்னரது வாழ்வில் சிரிப்பதற்கென்று இடமிருக்கிறதா?



"இப்போது நாம் நம் படைகளை ரோகணுவுக்கு அனுப்புவதுபற்றி நீ என்ன நினைக்கிருய் தேவி?" என்ருர் மன்னர்.

"இதற்கெல்லாம் என்னை யோசனைகளே கேட்க வேண்டாம் பிரபு! நீங்கள் எப்படி எப்படி எது எது நடைபெற வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அவைகளையே உத்திரவுகளாக்கி விடுங்கள் பிரபு!" என்ருர் கவலையுடன். தொடர்ந்து "என் இரத்தினுவைப் பற்றி மேற்கொண்டு தகவல்களுக்கு ஏற்பாடு செய்யுங்கள் பிரபு"—என்ருர்.

"சோழமாதேவியின் விருப்பு, வெறுப்புக்களுக்கு அத்தனைச் சீக்கிரம் பயன் கிடைத்துவிடாது என்பது என் தேவிக்குத் தெரியுமில்லையா?" என்று கேட்டார் மன்னர்.

அதற்குள் அங்கே முத்துமுடியாரும் வந்து சேர்ந்தார்; கவலை தோய்ந்த தோற்றத்துடன். ஏற்கெனவே மேனிவிடங்களுல் ஓரளவு விவகாரங்களைப் புரிந்து கொண்டிருந்தார் அவர். ஒரு இருக்கையிலமர்ந்து கொண்டார் அமைச்சர். அவரிடம், "அமைச்சரே! இந்த ஓலையைப் படியுங்கள்" என்று நீட்டினுர் மன்னர். அமைச்சர் எழுந்து அதனைப் பெற்றுக் கொண்டுவந்து மீண்டும் அமர்ந்து படித்துவிட்டு, "மன்னர் அவர்களது உத்திரவுதான் இப்போது தேவை! படை எடுக்க எல்லா ஏற்பாடுகளும் தயாராகவே இருக்கின்றன" என்ருர்.

"அமைச்சர்கூட, இப்போது படையெடுப்பு அவசியம் என்று கருதுகிருர்?" என்று கேட்டு நிறுத்தினுர் மன்னர்.

"காலம், நமக்குச் சாதகமாக இருக்கிறது அரசே!"

ஆமாம் அமைச்சரே! இப்போது நீங்கள் குறிப்பிடும் அந்தக் காலம், நம் எதிரிகளது கை, கால்களைக் கட்டிப்போட்டு ஆதரவற்ற நிலையில் ஆக்கி வைத்திருக்கிறது. அந்த அகதிகளைத்தான் நாம் வாள் கொண்டு தாக்கி வாகைசூட வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். இல்லையா அமைச்சரே!"

"மன்னர் அவர்கள் மன்னிக்கவேண்டும்! போரின் வெற்றிக்கு வீரம் மட்டுமே பயன் தந்து விடுவதில்லை. விவேக மிக்க யூகங்களும் தேவைப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள்!"

"அறிவேன் அமைச்சரே! இப்போது நாம் ரோகணுவை எதிர்ப்பது யூகம் என்று நான் நினைக்கவில்லை. அமைச்சரே! கமணன், தீசனை வெற்றி கண்டால், அவனே அரசன் என்று முடிசூட்டிக் கொண்டு, மகாகாமா சிம்மாதனத்தில் மீண்டும் வீற்ருல், அப்புறம் தான் நாம் படையெடுக்க வேண்டும். அதற்காக ஆயத்தங்களை நிறுத்த வேண்டாம். தயாராகவே இருக்கட்டும்!" என்று கூறிவிட்டு எழுந்தார்.

"தளபதியார் இதனை ஏற்கமாட்டார் என்றே நினைக்கிறேன்!" என்று கூறி அவரும் எழுந்தார்.

"போர்முகத்துக்கு தளபதி மட்டுமே செல்லப் போவதில்லை. நானும்தான் என்று அவரிடம் சொல்லுங்கள்! அத்துடன், போரின் விளைவும் முடிவும் தளபதியாருக்கு மட்டுமே உரியதல்ல வென்றும், இந்த அனுராதபுரத்தின் மன்னருக்கும் அதன் எதிரொலியுண்டு என்பதையும் அவருக்கு எடுத்துச்சொல்லுங்கள். நம்மெல்லோரையும்விட, போரின் விளைவுகளை மக்கள்தான் அனுபவிக்கப் போகிறவர்கள் என்பதையும் தளபதியாருக்கு விளக்குங்கள்" என்று கூறி தேவியாரின் பக்கம் திரும்பி, "வெய்யிலின் கடுமையைப் பார்த்தாயா தேவி! வா, மலர்ச் சோலை மாளிகைக்குச் செல்லலாம்!' என்று சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

* * *

பௌத்த மகாசபைக் கூட்டம் முடிந்து இளவரசன் கமணன் நேராக மகாகாமா வந்துசேர்ந்தான்.

பேரார்வத்துடன் அவனை வரவேற்றனர். முதலமைச்சர் காசியபரும், துணைத் தளபதி சூரநிமிலனும்.

வெகுநேரம் வரையில் நிலைமைகளைப் பற்றி இருவரும் அவனுக்கு விளக்கமளித்தனர். இடையே நந்திமித்திரனும் வந்து கலந்துகொண்டான்.

வெகுநேரத்துக்குப் பிறகு, தீகவாபிக்கு உடனே சூரநிமிலனை அனுப்புவதென்றும், அவனுடன் விகார தேவியை மகாகாமாவுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று தீசனுக்கு உத்திரவு அனுப்புவதென்றும் முடிவு செய்தனர்.

அந்த முடிவைத் தொடர்ந்து சூரநிமிலன் உடனேயே தீகவாபிக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

அவன் புறப்பட்ட பிறகு, தனித்துவிடப்பட்ட நந்திமித்திரனும், கமணனும் அனுராதபுரத்தின்மீது போர் தொடுக்க வேண்டியதற்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்து பேசினர். போர் அறிவிப்புக் கொடுப்பதற்குள் நந்தி, தம்பளைக் குகைக்கும், விஜிதபுரத்துக்கும் ஒருமுறை சென்று வரவேண்டும் என்று முடிவு கொண்டனர். அந்த முடிவுக்குப் பிறகு, கமணன் தன் இருக்கை சேர்ந்தான். விரைவில் தான் மன்னனுக முடிசூட்டிக்கொள்ள வேண்டியிருப்பதால் அந்த விழா எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்

பதுபற்றிய எண்ணங்களில் மிதந்து கொண்டிருந்தான்!

* * *

கமணனே விட்டுப் பிரிந்த நந்தி, தன் ஓய்வு விடுதிக்கு வந்து சேர்ந்தான். அங்கே நிகழ்ந்த அந்த அதிசயத்தைக்கண்டு அவனே வியந்து வாயடைத்துப் போனுன்!

சற்றுநேரத்துக்குமுன்பு வரையில் அழுது, அடம் பிடித்துக்கொண்டிருந்த இரத்தினுவா இவள்? நந்திமித்திரனுல் நம்பமுடியவில்லே.

வானத்து நிலவுதான் பெண்ணுருக்கொண்டு வந்து நிற்கிறதோ! அழகுத் தேவதைதான் இடம் மாறி வந்து இங்கே நிற்கின்ருளோ! சிருங்காரரசம் சேர்த்துக் குழைத்த வெண்பளிங்குச் சேற்றுச் சுதையா அவள்!

நந்திமித்திரன் மருண்டான். ஒரு அழகரசியாக—ஆனுல் எளிய அணிகளுடன், அவள் அந்த மஞ்சத்தில் வீற்றிருந்த காட்சி, அவனேக் கிரங்கச் செய்தது.

இரத்தினு தப்பி விட்டாளோ? தப்பும் முன், அவளே வேறு யாரையாவது அவளேப்போல் வேடம் தரித்து இப்படி அமர்ந்திருக்கும்படிச் செய்துவிட்டாளோ?

தடுமாறினுன் நந்திமித்திரன். தன்னுடைய காவலிலிருந்தும் ஒருத்தியால் தப்பிவிட முடியுமா? அவன் இதுபோல் நினேத்துப் பார்த்தான்.

மஞ்சத்தில் அமர்ந்திருந்த அந்த அழகுத் தெய்வம் சிரித்தது. வெண் முத்துப் பற்களேக் காட்டி, தன் இருகரங்களேயும் நீட்டி, "வாருங்கள்" என்று அழைப்பதுபோல பாவனே செய்துகொண்டே எழுந்தாள் இரத்தினு.

சந்தேகமே இல்லே. அவள் இரத்தினுதான். இத்தனே நாட்களாக, முகம் கொடுத்துக்கூடப் பேசாத - அழுது அழுது அழகையே குலேத்துக் கொண்டிருந்த இரத்தினுதான்!

எழுந்து வந்த இரத்தினு, நந்தியை அணுகி, அவளாகவே அவனது தோள்மீது இடது கையைப் போட்டுக் கொண்டு, "என்ன திகைக்கிறீர்கள்?" என்ருள்.

இரத்தினு என்ற அந்தத் தேவதை, நந்திமித்திரனிடம் வாய்திறந்து பேசிய முதல் வார்த்தையே அதுதான்! நந்தி திகைக்காமல் என்ன செய்வான்! அவன் வாயடைத்துப் போய்விட்டான். சிலவினுடிகள் வரையில் என்ன செய்வது என்பதுகூட புரியாமல் சிலேத்துவிட்டான். வானம் இடிந்து தன் தலேமீது விழுந்து கொண்டிருக்கிறதா? சொர்க்க உலகம் என்று கூறப்படும் இன்பக் கேணியில் தான் பலவந்தமாக அழுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேனே?

தன்னேத் தீண்டி, உடலோடு உடல் உராய நின்றுகொண்டிருந்தவளே வாரி எடுத்து இறுகத் தழுவிக்கொண்டான் நந்திமித்திரன்! உலகம் சுழல்வதுபோல இருந்தது அப்போது அவனுக்கு. ஆனுல் இரத்தினுவுக்கு?

சிரமப்பட்டு, அந்த அணேப்பிலிருந்து விடுபட்டு, 'என் காதல் உங்களுக்கு நிரந்தரமாக வேண்டுமா அன்பரே!" என்ருள்.

"இரத்தினு—என்னிடம் கேள்விகள் எதுவுமே கேட்காதே! நீயே பேசிக்கொண்டிரு! அந்த இன்ப ஒலிப் பிரவாகத்தில் நான் நீந்தி மகிழ்ந்திருக்க விடு!" என்ருன் நந்தி!

சுவைத்ததைச் சொல்கிறோம்

"வாதமென்ன வைத்தீர்கள் வம்பர்களே!"—என்ற சிறப்புக் கட்டுரையை சுவைத்தபோது - மறைந்த மாமேதை அண்ணுவின் கைவண்ணத்தை சுவைத்தது போன்ற எண்ணம் எழுந்தது. 'பொடியன்' என்ற புனேப்பெயரில் மறைந்திருக்கும் திரு. அரிமதி தென்னகன் நீடு வாழ்க!

கருமலேப்பழம்நீ, ஊத்தங்கரை

சமீப நாட்களாக 'காஞ்சி'யின் பகுதிகளில் புதிய விறுவிறுப்பை ஏற்படுத்துவதின் ஆவலும், அடையாளமும் தெளிவாகத் தெரிகிறது. ரொம்ப மகிழ்ச்சி.

ஆனுல் இந்த புதிய ஆவலில் ஒரு பெரிய குறை ஏற்பட்டிருப்பதை அன்புடன் தங்கள் கவனத்துக்கு—இனி அது தொடராமல் இருப்பதற்கு—கொண்டு வருகிறேன்.

அன்புடையீர், 'காஞ்சி' ஆண்டுமலருக்குபிறகு அண்ணுவின் படைப்புகள் வெளியிடப்படுவதே இல்லே, எதில்வெளியிடுவது விட்டுப்போனுலும் 'காஞ்சி'யில் அண்ணுவின் எழுத்துக்கள் நிறுத்தப்படுவது வருந்துதற்குரியது.

அமரர் அண்ணுவின் எழுத்தோவியங்கள் பிரசுரிக்கக்கூடாது என்பதல்ல நோக்கம்—வேறு சில பிரச்னேகள் காரணமாக இடமின்மை ஏற்பட்டு விடுகிறது. விரைவில் மீண்டும் பிரசுரிக்கின்ருேம்.

து. மாதவன், வேலூர்

மதிப்பிற்குரிய பெருந்தகையீர், "சோழமாதேவி" சரித்திரத் தொடர்கதை மிக விறுவிறுப்பாகச் செல்கிறது. இதற்காகவும், கருத்தாழமிக்க, கன்னற் கவிதைகளுக்காகவும், விரைவில் உறுப்பினராக காஞ்சிக்குச் சேர விழைகிறேன். விரைவில் சந்தாத் தொகையினே அனுப்பி வைக்கிறேன்.

மு. வாணி, பாளேயூர்

'காஞ்சி'க்குத் துணேயாக எல்லோரும் முன்வருவார்கள் என நம்புகிறேன். என் பங்கான உறுப்பினர் தொகை அனுப்பியுள்ளேன். என்னுல் இயன்ற அளவு உறுப்பினர்களேச் சேர்க்க முயற்சிக்கிறேன்.

"பொடியனின்" கட்டுரைகள் மிகவும் வரவேற்கப்படவேண்டிய கட்டுரைகள் தமிழர்கள் தெளிவார்கள் என நம்புகிறேன். எதிர்ப்பாளர்கள் ஒளிவது நிச்சயம்,

கருமலேத் தமிழாழன், சேலம்

"காஞ்சி" புரட்சி மழை பொழிந்தாலும், நடை கல்கியின் நடைதான்; என் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை! தமிழ் இல்லேயேல் தமிழன் இல்லே. தமிழ் வாழவேண்டுமானுல், மொழித் தூய்மை வேண்டும். தாங்கள் அறியாத உண்மை ஈதின்மையால், யான் விளக்கப் போவதில்லே. எனவே, எளிய, இனிய, பிறமொழிச் சொல் கலப்பற்றச் செந்தமிழ் நடையில், இனிக் "காஞ்சி" நடக்கட்டும்.

சில கிழமைகளாகக் 'காஞ்சி'யில் குறிப்பிட்ட சில கட்டுரைகளில் மட்டுமே, பிறமொழி கலப்பு அதிகரித்திருக்கிறது என்பதை, அறிகிருேம் தவிர்க்கமுடியாதவை அவை. எனினும் குறைகளேக் களேய முயல்வோம். —ஆ-ர்.

என். பாண்டியதுரை, ஒரிசா

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவோ நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் : சென்னை-8

"ஆமாம்! இனி நான் காலமெல்லாம் உங்களுடனேயே இருந்து, உங்களது திரண்டு உருண்ட மார்பகத்தில் மயங்கிச் சாய்ந்தபடி இந்த உலகை நான் மறக்க—அந்த இன்பக் கிளுகிளுப்பில் நீங்கள் உங்களையே மறக்க வேண்டும் என்று நான் இப்போது முடிவெடுத்துவிட்டேன் அன்பரே! உண்மையாகவே சொல்கிறேன்! இதுவரையில் நான் இருந்துவந்த இருண்ட உலகம் எவ்வளவு இழிவானது என்பதையும் உணர்கிறேன்! இனி இருக்கப்போகும் உலகமும், கிடைக்கப்போகும் வாழ்வும் எத்தனை தித்திப்பாக இருக்கப்போகிறது என்று எண்ணி மகிழ்கிறேன். ஆனல் ஒன்று......

"......ஆனல் ஒன்ரு? இரத்தினு! நிறுத்திவிட்டாயே! ஆனல் போட்டு நிறுத்திவிட்டாயே இரத்தினு! தமிழறிந்தவனுயிற்றே நான். சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டு, இறுதியில் ஒரு ஆனல் போட்டால், சொன்னவைகளை மறுக்கப்போவதாக அல்லவா பொருள்! கண்ணே இரத்தினு! ஆனல் என்று சொல்லிவிட்டாயே......"

நந்தி புலம்பிக்கொண்டுதான் இருந்தான். அவன், வாழ்க்கையில் அந்த இடத்துக்கும் அந்தஸ்த்துக்கும் வருவதற்கு முன்பும், வந்த பிறகும், அவனல் அணைத்துக்கொள்ளப்பட்ட ஆரணங்குகள் அநேகம் பேர்! எத்தனையோ எழிலரசிகளின் இன்பச் சரசத்தில் இரவுகளை எச்சிலாக்கிக் களித்திருக்கிருன். மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டவர்களும் உண்டு! காதலை வேண்டி வந்து கேட்டுப் பெற்றவர்களும் இருக்கிருர்கள். என்ருலும்......என்ருலும்......

இரத்தினவைப் பார்த்த பின்பு—அதுவும் சர்வ அலங்காரத்தோடும், அழகுச் சிலையாக இப்போது மாறிவிட்டிருக்கும் அவளைப் பார்த்த பின்பு—யாழையும், மழலையையும் வெல்லும் சொல்லால் பேசக் கேட்டுவிட்ட பின்பு; தான் இதுவரையில் ஒரு வாழ்க்கையே வாழவில்லை என்பதை உணர்வதுபோல ஆகிவிட்டான் நந்திமித்திரன்.

இரத்தினுவின் அன்பு தனக்கு கிடைக்கும் என்று அவன் எண்ணவே இல்லை. அந்த அழகு மேனியின் மீது, அவளது விருப்பின்றியேதான் ஊஞ்சலாட வேண்டியிருக்கும்; கசக்கி முகர்ந்துவிட்டு, மீண்டும் அனுராதபுரத்துக்கே துரத்திவிட்டுவிட வேண்டும் என்றுதான் இதுவரையில் எண்ணிக் கொண்டிருந்தான்!

அவளை பலவந்தமாக அடைந்துவிட முயன்ற வேளைகளில் எல்லாம், அவனை ஏதோ ஒரு சக்தி தடுத்துக்கொண்டே வந்தது! பொறுத்துப்பார்! பொறுத்துப்பார்! என்பது போன்ற உணர்வுகள் அவனுள் எழுந்தன. அந்த உணர்வு மட்டும் அவனுக்கு ஏற்படாமல் போயிருந்தால், இந்நேரம் இரத்தினுவும் ஒரு கசங்கிய மலராக—திரிந்த பாலாக—வழுக்கிய நிலமாக ஆகிப்போய் இருப்பாள்! எதிர்ப்பட்ட பெண்களின் எண்ணிக்கையில் அவளும் ஒருத்தியாக ஆகிப்போயிருப்பாள்.

"நல்லவேளை — நான் மிருகமாகாமல் தப்பினேன்!" என்று தன்னுள் சொல்லிக்கொண்டான் நந்தி. "அன்பரே! ஆனல் என்று நான் எதனல் சொன்னேன் தெரியுமா? நான் உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். நீங்கள் என் ஒருத்திக்கே சொந்தமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்

கொள்ள நினைக்கிறேன். ஆனல்...என்று மறுபடியும் சொல்லி நிறுத்தினள் இரத்தினு.

"ஐயோ, மறுபடியும் ஒரு ஆனலா?......"

"ஆமாம் அன்பரே! உங்களால் இந்த ரோகண நாட்டின் மணிமுடியைத் தரித்துக்கொள்ள முடியுமா? கமணன் என்ற ஒரு சிறுவன் அமரப்போகும் அந்த அரசுக் கட்டிலில், என் அன்பர் அமரவேண்டும் என்று எனது அற்ப மனம் எண்ணுகிறது! அது சரியோ, தவருே......ஒன்று அதனை மாற்ற நீங்கள் முயலவேண்டும்; அல்லது நிறைவேற்ற முயலவேண்டும். அதுவரையில் என்னைத் தொடக்கூடாது. என் காதலைக் கேட்கக்கூடாது."

சொல்லி முடித்தாள் இரத்தினு! இரத்தச் சிவப்பாக மாறிவிட்டன நந்தியின் கண்கள்!

தன்னை ஒரு நம்பிக்கைத்துரோகியாக மாற வேண்டும் என்று எத்தனை எளிதாகச் சொல்லி விட்டாள் அந்தத் தூர்த்தை! உடைவாளால் தலையைத் துண்டாடிவிட வேண்டும் என்று ஒருகணம் நினைத்துவிட்டான் அந்தப் பேதை!

இரத்தினு — அவளுக்குள் எத்தனை எத்தனைத் திட்டங்கள் உருவாகிவிட்டிருக்கின்றன. அவனிடம் சிக்கிக்கொண்டுவிட்ட இந்த இடைக் காலத்தில்! அத்தனை எளிதாகக் காரியம் நடைபெற இடங் கொடுத்துவிடும் இயல்பு அவளுக்கு இருக்கிறதென்ருல், அந்த இயல்புடைய ஒருத்தி சோழப் பேரரசியாக வர இருந்தது துர்ப்பாக்கியம் அல்லவா!

சற்றே தள்ளி நின்று மீண்டும் தன் செம்பவழ வாய் திறந்துச் சிரித்தாள் இரத்தினு! அந்தச் சிரிப்பு, நந்தியை மறுபடியும் பித்தனுக்கியது. அருகே வந்து மீண்டும் இரு கரங்களாலும் அவனது கழுத்தைக் கோர்த்துப் பிடித்துக்கொண்டு, "என் காதலன் இந்த நாட்டின் மன்னன் ஆகவேண்டும் என்று நான் நினைக்கக் கூடாதா அன்பரே!" என்ருள்! -

நந்திக்கு இப்போது ஆ த் தி ர ம் வரவில்லை. மாருக, அந்தப் பைத்தியக்காரத்தனமான எண்ணத்தை—அற்ப துரோகச் சிந்தையை, அவள் இதயத்திலிருந்து துரத்திவிட என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி எண்ணமிடத் தொடங்கினன்.

"ஓ, நீங்கள் அரசராவதற்கு என்ன செய்யலாம் என்பதுபற்றி நினைக்கத் தொடங்கி விட்டீர்கள்...... அப்படியானல், இப்போது நான் உங்களைத் தனிமையில் விட்டுவிட வேண்டும்" என்று கூறி, அவனது கழுத்தை விடுவித்துவிட்டு, மீண்டும் அன்னமென ஆடி நடை நடந்து மஞ்சத்தில் சென்று அமர்ந்தாள். அவள் நடந்து செல்வதுகூட அவனுக்குள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது.

"இரத்தினு! நா ன் ரோகணுவின் அரசனுகிறேனே இல்லையோ! நீ என் அரசியாகிவிட வேண்டும்" என்ருன் மதுவுண்ட மந்தியின் நிலையில்.

மீண்டும் இரத்தினு சிரித்தாள்! சிரித்துக் கொண்டே இருந்தாள்! சிந்தைக்குள்ளே இருப்பவைகளை மறைத்துக்கொண்டு அவள் சிரித்தாள்! அந்தச் சிரிப்பில் சிதைந்து கொண்டிருந்தான் நந்தி!

"இரத்தினு! நான் இப்போது ராஜரடாவுக்குச் செல்லப் போகிறேன்—என்னுடன் வர முடியுமா?" என்ருன்.

'பதுக்கல்காரர்கள்-ஆக்கிரமிப்பாளர்களை விட மோசமானவர்கள்'

"பதுக்கல் வியாபாரங்களைத் தடுக்கவும், பதுக்கல்காரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கத்தின் சார்பில் எல்லா மாவட்ட அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது; இப்படிப்பட்ட நெருக்கடி நேரத்தில் பதுக்கல் மூலம் பணம் சம்பாதிக்க முயலுகின்றவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்களைவிட மோசமானவர்களாகக் கருதப்படுவார்கள்.

"அவர்களை அதிகாரிகள் அடையாளம் கண்டு கொள்வது ஒருபுறமிருந்தாலும், அந்தச் சமூக விரோதிகளை அடையாளம் காட்டவேண்டிய கடமை பொதுமக்களுக்கும் உண்டு."

—முதலமைச்சர்

சற்றே துணுக்குற்ற இரத்தினு, "அனுராதபுரத்துக்கும் போவீர்களோ?" என்ருள். அதன் எல்லையை மிதிக்காமலே போய்விட முடியும் — வருகிருயா?" என்ருன்!

"ஏன், நான் உங்கள் அரசியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டீர்களா? என்ன?" என்ருள்.

அதன் பொருளைப் புரிந்துகொண்ட நந்தி, ஆமாம் இரத்தினு! நீ இப்போது என்னுடன் எங்கும் வருவது நல்லதல்லதான்! நான் இப்போதே புறப்படப் போகிறேன். ஒரு கிழமைக்குள் திரும்பி வந்து விடுவேன்! அதுவரையில் நீ..." என்ருன்.

"...நான் இங்கே கைதியாகத்தான் இருக்க வேண்டும்" — என்ருள் சட்டென்று இரத்தினு! "ஆமாம்! நீ சுதந்திரமாகச் செயல்பட இன்னும் காலமிருக்கிறது" என்று சொல்லிவிட்டு, வெளியே வந்து, காவலர்களை அழைத்து, காவல்மீது அதிகக் கவனம் செலுத்தக் கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டான், குதிரையேறி—தம்பளையை நோக்கி.

* * *

அதே நேரம், தீகவாபியிலிருந்து தீசன் படை நடத்திக்கொண்டு, மகாகாமாவை நோக்கி வந்து கொண்டிருக்கிருன் என்ற செய்தியால் சற்றே அதிர்ச்சி அடைந்த கமணன், அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை கலந்தான்! அரசி விகாரதேவியும் கூட, தீசனல் சிறைவைக்கப்பட்டு விட்டாள் என்ற இன்னொரு செய்தி அனைவரையுமே திகைப்புக்கு ஆட்படுத்தி விட்டது!



நெருப்பிலிடலாமா...?

புலவர் கோ. அண்ணாமலை

கொள்கை விளங்கினால் அது தொடர்பான செயல் விளங்கும். நினைப்புக்கு நியாயம் புரிந்தால் அதனோடு வரும் நடப்புக்கும் நியாயம் புரியும். அந்த வகையில் கடவுளைப் பற்றிய நம் கொள்கைகளை விளங்கவைத்து அவை தொடர்பாக ஆலயங்களில் செய்யப்படும் தமிழ் அர்ச்சனை, நிதிகளை நற்பணிகளுக்குப் பயன்படுத்தல் ஆகிய செயல்களையும் புரிய வைக்க நாம் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இதற்குமுன் வெளிவந்த இதழ்களில் கழகத்தின் கடவுட் கொள்கையினை விளக்கியிருக்கின்றோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடவுள்பற்றிய கொள்கை-அது அரசுக் கட்டில் ஏறிய பின்னர் ஏற்பட்ட கொள்கையல்ல என்பதனையும் விளக்கியுள்ளோம். எந்தக் கட்சி அரசு செலுத்தினாலும் இந்த இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரை அது ஒரு 'மதச் சார்பற்ற அரசாக' (Secular State) இயங்கிட வேண்டும் என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட மரபாகும் என்பதையும் கழகமும் கழக அரசும் உணர்ந்திருக்கிறது. இம் மதச் சார்பற்ற தன்மைக்குப் பல்வேறுபட்ட துறைகளில் வல்லாரெல்லாரும் விளக்கம் அளித்திருப்பதை நாடறியும். மதச் சார்பற்ற தன்மையில் அரசு இயங்கிட வேண்டும் என்பதனை '67இல் தமிழக அரசுப் பிறந்த அந்த வேளையிலே அல்ல—அதற்குப் பல காலம் முன்பே நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்களுக்கே உரிய தனித் தன்மையோடு விளக்கியிருக்கிறார்கள். அவர்கள் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்வதாக அமையப் பெற்ற அச் சொற்றொடர் எவ்வளவு தெள்ளத் தெளிவாக சமயச் சார்பற்ற தன்மையினை விளக்குகிறது என்பதனை நடுவு நிலைமையோடு இதனை ஆராய்வோர் விளங்கிக் கொள்வர் என்றே நாம் நம்புகிறோம். அறிஞர் அண்ணா அடிக்கடி சொல்வார்கள்:

'நான் கைலி கட்டாத முஸ்லிம், காவியணியாத இந்து. சிலுவை அணியாத கிறித்தவன்!

புறத்தோற்றம்—புறச் சடங்கு சம்பிரதாயங்களுக்காகச் 'சிண்டைப்' பிடித்துக் கொள்ளும் சமய வாதங்களிலே சிக்கிக் கொள்ளாமல், அந்தச் சமயங்களின் உள்ளார்ந்த தத்துவங்களை ஏற்பவன் நான் என்பதனை விளக்கிச்சொன்ன நளினம், அந்த சொல்வல்ல கோமானைத் தவிர வேறெவருக்கு வாய்க்கும்?

இந்த மொழிகளைவிட, கழகத்தின் சமயச் சார்பற்ற எல்லாச் சமயங்களின் மேம்பட்ட நோக்கத்தினை ஏற்றுக் கொள்கிற அழகு மொழிகளை இதுவரை யாராவது சொன்னதுண்டா? மதச் சார்பற்ற அரசு (Secular St:te) என்பதற்கு எளிய—ஆனால் தெளிவான விளக்கம் அறிஞர் அண்ணா அவர்களால் எப்போதும் இப்படித் தரப்பட்டிருக்கிறது. கழக அரசின் மதக் கொள்கையினைக் கேலி செய்யும் 'ஆஷாடபூதிகள்' இவைகளை அறியாதிருந்தால் இனியேனும் அறிந்துகொள்ள முன்வரவேண்டுமென்று அழைக்கிறோம்.

அடுத்துத் தமிழ் மொழியில் கடவுள் வழிபாட்டை ஆலயங்களில் நடத்திட விரும்புவோர் அங்ஙனம் நடத்திக் கொள்ளலாம் என்கிற அரசின் கருத்தினைப் பலரும் ஏற்றுக்கொண்டுவிட்ட பின்னர் சிலர் ஆர்ப்பரிக்கின்றார். எனவே தமிழில் அர்ச்சனையைப் பற்றியும் சில கருத்துக்களை இங்கே நல்லோர்தம் சிந்தனைக்கு வைத்திட விரும்புகிறோம்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் மக்களை அவர்களுடைய மொழியில் கடவுளை வணங்க அனுமதிக்க முடியாது என்று சொல்ல வேறு ஒரு மொழியினருக்குத்தான் உரிமை என்று பேசுவதென்றால் எவ்வளவு ஆணவம் இருக்க வேண்டும், அப்படிச் சொல்கின்றவர்க்கு என்று பார்த்திடவேண்டும் முதலில்!

உலகனைத்தையும் படைத்துக் காத்துவரும் எல்லாம் வல்ல இறைவனுக்குத் தமிழ் மொழி மட்டும் தெரியாது என்பதற்கு என்ன ஆதாரம்? அப்படியானால் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிப்பாடி வழிபட்டதெல்லாம் வீணுக்குத்தானா?

மொழியறியாத — ஊமையர்க்கும் செவிடர்க்கும் வழிபாடே கிடையாதா? உலகில் சம்ஸ்கிருதத்தால் வழிபாடு செய்பவர்களைத் தவிர வேறு எம்மதத்தவரும் — மொழியினரும் கடவுள் அருள் பெறுவதில்லையா?

பைபிள் உலக மொழி அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்கள் அனைவராலும் பழக்கப்படுகின்றதே, அந்த முயற்சியில் ஈடுபட்டோர்கள் எல்லோரும் அறிவீனர்களா?

சம்ஸ்கிருதத்தால் அர்ச்சித்தால்தான் அர்ச்சித்தது; இல்லாவிட்டால் தமிழகக் கோயில்களில் வழிபாடே கூடாதா? சரி. சம்ஸ்கிருதம் இந்த நாட்டுக்கு வருவதற்கு முன்பு இந்த நாட்டில் கோயில்களே இல்லையா? யாரும் கடவுளை 'அர்ச்சிக்கவே' இல்லையா? இந்தக் கேள்விகள் ஒருபுறம் இருக்க, கருத்தோடு நேரடித் தொடர்புடைய இரண்டு கேள்விகளை எடுத்துக் கொள்வோம். எப்போது வந்தது தமிழ்நாட்டு ஆலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனை? ஏன் வந்தது?

இந்த வினாக்களுக்கு மட்டும் தமிழ் இலக்கியங்களில் மிக்க தேர்ச்சியும் தமிழ் நாட்டு வரலாறு — கல்வெட்டுகள் — செப்பேடுகள் ஆகியவற்றில் 'நுண்மாண் நுழைபுலமும்' மிக்கவராகிய ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் விடையளிக்கிறார்கள்.

"தருமபுரியில் உள்ள கோயில்களுக்குப் பதினோராம் நூற்றாண்டில் வடமொழியறிந்த பட்டர்கள் நியமிக்கப் பட்டனர். அக்காலத்துக்குச் சிறிது முன்னும் பின்னும் நிலவிய காலத்தில் தமிழ் நாட்டுக் கோயில்களில் பிராமணப் பட்டர்கள் கோயில் வழிபாட்டுக்கென புது வழக்கமாக நியமிக்கப் பெற்றனர். இதுவே, பின் தமிழகம் முழுவதும் பரவிற்று- தமிழ் தெரியாதபடியால் அவர்கள் தங்கள் வடமொழியிலேயே அருச்சனைகளைச் செய்யலுற்றனர். கோவில்களில் எழுந்தருளும் தெய்வம் ஒவ்வொன்றுக்கும் அவர்களே அருச்சனைகளை ஆக்கிக்கொண்டு இன்றும் அவற்றைக் கையாண்டு வருகின்றார்கள்"

பதினோராம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பு — பத்தாம் நூற்றாண்டு ஒன்பதாம் நூற்றாண்டு என்றுகூட இருக்கட்டும் — எந்த நூற்றாண்டானாலும், 'புது வழக்கமாக' வடமொழி மட்டும் அறிந்த பட்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் தமிழ் தெரியாத காரணத்தால் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப் பட்டார்கள். தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதியமான்களில் சிலர், "தமிழ் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்! சம்ஸ்கிருதத்தில் செய்துகொள்வதால் தவறில்லை" என்று பரிதாபப்பட்டு அனுமதிக்கப் போய், இப்போது பரிதாபப் பட்டவர்களே, பரிதாபத்துக் குரியவர்களாகும் நிலைக்கு ஆளாக நேரிட்டுவிட்டது! முன்பு தமிழ் தெரியாத பட்டர்களுக்கு உண்மையில் இப்போது தமிழைத் தவிர வேறு மொழி தெரியாது. 'முடியாது—சம்ஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்வோம்' என்பதைக்கூட அவர்கள் தமிழில்தான் சொல்லித் தீர வேண்டியிருக்கிறது! இந்த நிலையிருந்தும் சில பிராமணோத்தமர்கள் அர்ச்சனை சமஸ்கிருதத்தில்—யுகக் கணக்கில்! என்று துணிந்து—அல்லது — அறியாது, ஆம் வரலாற்றை அறியாது, கூரைமேல் ஏறிநின்று கூவுகின்றார்கள்! சம்ஸ்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்ட பிராமணர் எவரும் தமிழ் நாட்டை அரசு வீற்றிருந்து ஆண்டதாக வரலாறில்லை! என்ன இருக்கிறது? அரசு வீற்றிருந்து ஆண்டவர்களை நத்தித் தங்களுக்குத்தேவையானவற்றைச் சாதித்ததாகச் சான்று இருக்கிறது, வரலாற்றில்!

டாக்டர் கே. கே. பிள்ளை, 'தென்னிந்திய வரலாறு' என்னும் நூலில் 'ஆரியர் தம் நாகரிகத்தைத் திராவிடர்பால் புகுத்தும் பொருட்டு, பெரும் படைக் கூட்டங்களோடு திரள் திரளாக வந்து தென்னாட்டு மக்களை அடக்கி ஒடுக்கித் தம் கட்டுப்பாட்டுக்குட்படுத்தினர் என்று கருதுதற்குரிய சான்றுகள் இல' என்று ஓரிடத்திலும்,

ஆரியர் சிறு சிறு கூட்டமாகத் தென்னிந்தியாவில் வந்து குடியேறினர். இது முற்காலந் தொட்டே நடந்துவந்தது. அங்ஙனம் வந்து சேர்ந்த ஆரியர், தென்னாட்டு அரசர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றதனால், அவரது செல்வர்க்கு நாளுக்கு நாள் வளர்ந்தது. அவர்கள் பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் தென்னாட்டு மக்களிடையே பரவின' என்று பிறிதோர் இடத்திலும் எழுதுகிறார்.

டாக்டர். கே. கே. பிள்ளை இக்காலத்து தலைசிறந்த வரலாற்றாசிரியர் என்பதை யாவரும் அறிவர். எனவே வடமொழியாளர் யாரும் அரசு வீற்றிருந்து செய்துவைத்த அசைக்கமுடியாத பட்டயமோ—பட்டயத்தால் வந்த வழக்கமோ அல்ல! அப்படியே இருப்பினும் அது மக்களாட்சி நடைபெறும் நாளில் தொடர்பற்ற பழங்குப்பை என ஒதுக்கப்படும்—அது வேறு! எனினும் சம்ஸ்கிருத அர்ச்சனைக்கு அத்தகையதோர் பழய ஆதரவும் இல்லை, வரலாற்றில்! 'போனால் போகட்டும்! தமிழ் தெரியாதவர்களாக இருக்கின்றார்களே — சம்ஸ்கிருதத்தில் செய்யட்டும், அர்ச்சனையை!' — என்று பதினோராம் நூற்றாண்டில்—ஔவை. க. துரைசாமி அவர்களின் கருத்துப்படி—தமிழக அரசர்கள் சம்ஸ்கிருத அர்ச்சனையை அனுமதித்தனர்! அந்தக் காலம் முதல் காட்டப்பட்டு வந்த 'தாட்சண்ய' உணர்வையே அவமதிக்கத் துணியும் பூசுரர்களை —அனைத்துப் பூசுரர்களையுமல்ல— கீழ்த்தர எண்ணம் மிக்கவர்களை— நாடு கண்காணித்து வருகிறது என்று மட்டும் தெளிவாக்கிட விரும்புகிறோம்!

இந்த இடத்தில் ஆழ்ந்த சமய அறிவு மிக்க நம்முடைய முன்னாள் இந்திய ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணனைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் கூறுகிறார்:

"We cannot ask educated people to accept the deliverances of faith without national evidence Whatever we are called upon to accept must be justified and supported by reason."

'கற்றவர்களை, நாம் சொல்லுவதையெல்லாம் ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்கமுடியாது. நாம் சொல்லும் எதற்கும் தகுந்த அறிவோடு பொருந்திய காரணமும் ஆதாரமும் நியாயமும் இருக்க வேண்டும்' என்கிறார்.

'கடவுள் என்றால் எங்களுக்குத் தான் தெரியும்—சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யாவிட்டால் 'சாந்நித்தியம்' போய்விடும்! சாங்கியம் கெட்டுவிடும்! இவர்கள் நாத்திகர்கள்—அவர்களுக்கு என்ன தெரியும் என்கிறவர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் மொழிகளைப் பற்றித் தெளிவு பெற்றிடவேண்டும்.

சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை என்றால் ஏற்றிடும் கடவுள் தமிழில் என்றால் ஏன் ஏற்கமாட்டார்? அறிவோடு கூடிய—அவாளுக்கெல்லாம் விளங்குகிற மொழியில் சொல்ல வேண்டுமானால், 'நியாய யுக்தமான' 'விவேகமுள்ள' - ஆதாரம் (National evidence) இன்னது எனக் காட்டி நிறுவவேண்டாமா ? தமிழறிந்த மக்களால்கட்டப்பட்ட ஆலயங்களை ஏற்கும் கடவுள்— தமிழ் மட்டுமே அறிந்த உழவர்களால் உண்டாக்கப்படும்உணவை ஏற்கும் கடவுள்—அதுவும் கூடப் பேசவராத ஊமையர் உடல்வலிக்க அரைக்கும் சந்தனத்தை கொண்டு அபிஷேகம் செய்து கொள்ளும் கடவுள், 'அம்மா' என்று மட்டுமே பேசும் ஆவின் பாலை ஏற்று அபிஷேகம் செய்துகொள்ளும் கடவுள் கண்ணப்ப நாயனாரின் 'கறி' யுணவை ஏற்றுக்கொண்ட கடவுள், தமிழில் அவரைப் போற்றி வழிபட்டால் ஏன் அந்த வழிபாட்டை ஏற்கமாட்டார்? சம்ஸ்கிருதத்தில் வழிபட்டால்தான் ஏற்பேன் — வேறு மொழிகளில் என்றால் ஏற்கமாட்டேன் என்று எப்போதாவதுஆண்டவன் சொன்னதுண்டா? சொன்னதாகப் புராணங்களிலாவது யாராவது எழுதியதுண்டா?

தமிழை விரும்பிய கடவுள்— தமிழிசைக்கு உருகும் கடவுள்— தமிழை மற்ற புலவர் பெருமக்களோடு அமர்ந்து ஆராய்ந்த கடவுள் என்றுதானே தமிழ்ச் சமய நூல்கள் சொல்லுகின்றன. அந்தத் தமிழ்ச் சமய நூல்கள் கூறுபவை

யாவும் பொய்யா? அப்படியானுல் பெரியார் இராமசாமி குறிப்பிடுவதைப் போல அவைகளைக் கொளுத்திவிடவாவது 'சம்ஸ்கிருதத்திலேதான் அர்ச்சனை' என்போர் ஒருப்படுவரா? தமிழில் எழுந்த புராணங்களும், பிரபந்தங்களும், தேவார திருவாசகங்களும் இறைவன் காதுக்கு எட்டாது - எட்டினுலும் கசக்கும் என்ருல் அவை வீணுனவை அவைகளை நெருப்பிலிட வேண்டும் என்று கூற இந்த 'பக்தகோடிகள்' முன்வருவரா? சம்ஸ்கிருத நூல்களின் அனைத்துச் சமயக் கோட்பாடுகளையும் தமிழில் வழங்க முடியும் என்ருல் — சமயக் கொள்கையில் எல்லாவற்றிலும் மேலான இறைவனை 'அர்ச்சித்தலை' மட்டும்வழங்க முடியாதா? அவ்வாறு இதுவரை முடிந்திராவிட்டால் - இனியேனும் அக்கறை தோன்றக் கூடாதா? தோன்றி, 'சம்ஸ்கிருதம்' என்னென்ன கூறி 'அர்ச்சிக்குமோ' அவற்றைத் தமிழிலும் 'அர்ச்சிக்க' முயல்வது எப்படித் தவறு? சம்ஸ்கிருதத்தில் சொல்வதை வேறு மொழியால் சொல்ல முடியாதா?

சம்ஸ்கிருதத்தில் சொல்லப்படும் அர்ச்சனைக்குப் பொருள் என்ன என்று கேட்டால் அதனைச் செய்து ஈசன் அருள் தேடுவோர்—ஆலயங்களின் 'சாங்கியத்தை'யும் 'சாந்நித்தியத்தையும்' காப்போர்—வேறு மொழியில் சொல்லவேண்டாமா? 'ஒரு மொழி என்றிருந்தால் அதனுல் சொல்லப்படும் எந்தக் கருத்தும் பிறிதோர் மொழியாலும் சொல்லப்பட முடியும்'—என்பது மொழிநூலார் ஏற்றுக்கொண்டது! வேறு எந்த மொழிகளின் தன்மை எப்படியிருந்தாலும் 'சமஸ்கிருதத்தால்சொல்ல முடிந்ததைத் தமிழிலும் சொல்ல முடியும்!' முடியாது என்போர் இருந்தால் அவரை ஏற்கும்படிச் செய்திடத்தக்க விளக்கங்களை அளித்திட நாம் எப்போதும் தயாராய் இருக்கிருேம்.

எனவே சமஸ்கிருத்தால் முடிந்தது-தமிழால் முடியாது என்பதற்கு இடமில்லை. உண்மையில், இறைவனிடத்தில் பேச மொழியே தேவையில்லை. 'மௌனமா யிருப்பது'!— இறைவனை அணுக முயலும் முயற்சியில் பல கட்டங்களைத் தாண்டிய நிலை. எனவே உண்மை ,பக்தர்கள்'— 'மோன நிலை'யில் வாழப் பழகியோர்- 'நிஷ்டையில்' இருக்கத் தெரிந்தோர்—விவேகானந்தர் — இராமகிருஷ்ணரைப் போன்றவர்கள் மொழிச் சண்டையை ஆண்டவன் முன்கொண்டு போனதில்லை. எல்லா மொழிகளும் இறைவனின் மொழிகள். மொழியில்லாதவரையுழ் விழியில்லாதவரையும் தன் குழந்தைகள்—என ஏற்க இறைவன், தயங்கிட மாட்டான்! ஏனே...இவர்கள் தயங்குகின்ருர்கள்.!

★

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலே தீப் பற்றி எரியும்போது, அதனை அணைக்கவேண்டும் என்பதிலேதான் அனைவரும் ஆர்வம் காட்டுவர். திருடன் புகுந்துவிடும்போது ஆளுக்கு ஒரு தடி எடுத்துக்கொண்டு அவனை விரட்டுவதற்குத் தான் முயலுவர். தீயை யணைப்பதில் காட்டும் ஆர்வத்தை—திருடனை விரட்டுவதில் காட்டும் ஆர்வத்தை இன்று நாட்டிலே பகைவன் புகும்போது காட்ட வேண்டியவர்கள் ஆவோம்; காட்டிவருகின்ருேம். நமக்குள்ளே உள்ள மனத்தாங்கல்களைக் காட்டிக் கொள்வதற்கு இதுவல்ல நேரம். ஊடல் கொண்டுள்ளனர் என்ருலும், வீட்டிலே அயலவர் உள்ள போது ஊடலை வெளிப்படுத்தக்கூடாது அல்லவா?

அதனுல், நாட்டின் தலைவர்கள் அத்தனைபேரும் இந்த நேரத்தில் அரசுக்குத் தங்களுடைய ஆதரவைக் காட்ட வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து 'உங்கள் முயற்சிக்கு எங்கள் ஆதரவு உண்டு' என்பதை உரைத்திருக்கின்றனர். நாட்டு மக்களும் இந்த நேரத்தில் தங்கள் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்து நாட்டுப் பாதுகாப்பில் தங்கள் பங்கை நிறைவேற்ற வேண்டும்.

மக்களுடைய மன உறுதியைப் பொறுத்துத் தான் எந்த நிலையும் உருவாகும். அரசு என்பது ஆகாயத்தில் எங்கோ இருந்து இயங்குவது அன்று, பாலினின்று வெண்ணெய் கிடைப்பதைப் போல் மக்களிடையே இருந்து அரசு உருவாகிறது. நல்ல பால் நல்ல வெண்ணெய்க்குக் காரணம் ஆவதுபோல், நல்ல அரசு அமைய மக்களும் காரணமாக வேண்டும். ஆபத்தான காலங்களில் கலங்காமல் இருப்பதே மனிதனுக்கு வாழ்க்கையில் வெற்றியைத் தேடித் தரும். அதேபோல் நாட்டுக்கு ஆபத்து வந்திருக்கும் வேளையில் அதன் மக்கள் காட்டும் துணிவில்தான் நாட்டின் பாதுகாப்பு அடங்கியுள்ளது. நமது படை வீரர்கள் திரம் மிகுந்தவர்கள்; திறனுடையவர்கள். அவர்களுடைய ஆற்றலுக்குத் தாங்காமல் பகைவர்கள் புறங்காட்டி ஓடுவது உறுதி.

அந்த நம்ம்பிக்கை, நம் உள்ளத்தில் என்றும் மங்காமல் இருக்கவேண்டும். 'வெற்றி நமதே' என்பதை எண்ணி இருப்போமாயின் மனத்தில் வீணுன கலவரங்களும் குழப்பங்களும் தோன்றக் காரணம்இல்லை. மக்கள் அப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டு அன்ருட அலுவல்களில், தங்கு தடையின்றி ஈடுபட்டுள்ளனர், அவர்களுடைய வாழ்க்கை எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்பதை அறியும்போது போர்க்களத்திலே நின்று போராடும் வீரர்களும் உற்சாகம் கொண்டு போரிட இயலும். அரசும் தன் கவனம் முழுவதையும் போர் முயற்சிகளில் செலுத்தி பகை முடிப்பதற்கு அது பயன்படும்.

தங்களால் ஆன பொருள் உதவியையும், இந்த நேரத்தில் செய்வது நல்லதாகும். மக்களுடைய பொருள் வந்துதான் போர் முயற்சிகளில் அதனைச் செலவிட வேண்டும் என்பது இல்லை, ஆனுல் போர் முனைக்குத் தங்கள் பொருள் பயன்பட வேண்டும் என்று மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை அது மெய்ப்பிக்கும் அல்லவா?

இரத்ததானம் போன்ற நன்கொடைகள் நேரிடையாகப் போருக்குப் பயன்படுபவையாகும். இந்தத் துறைகளில் இயன்றவகையில் எல்லாம் மக்கள் தங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அரசுக்குக் காட்டவேண்டிய நேரம் இது.

நாம் போர் வெறியர்கள் அல்லர்; ஆனுல் போர் கண்டு அஞ்சும் கோழைகளும் அல்லர் என்பதை வெளிப்படுத்திவிட வேண்டும். அரசுக்குத் துணை நிற்பதன் வாயிலாக அதனை உலகினுக்கு உணர்த்துவோம்.

வெல்வோம்; வாழ்வோம்!

★

சிறப்புக் கட்டுரை!

படை திரட்டும் பக்தர்களே!

முடிந்தால் மறுத்துப் பார்!

— பொடியன் —

'தியாகபூமி'யின் தீராதி தீரர்களுக்கு நாம் விடும் அறைகூவல் இதுதான்! முடிந்தால் மறுத்துப் பார்!! மாவட்டந்தோறும் மாநாடு, நாள் குறித்துப் போராட்டம் என்றெல்லாம் மிரட்டும்மேனி மினுக்கிகளுக்கு நாம் விடுக்கும் அறைகூவல் ஒன்றே ஒன்றுதான்! முடிந்தால் மறுத்துப் பார்!! ஆடுகளோடு ஆடுகளை மோதவிட்டு ஒழுகும் இரத்தத்தைச் சுவைக்க ஏங்கும் ஆரிய நரிகளுக்கும், கோயில் ஓநாய்களுக்கும் நாம் விடுக்கும் கோரிக்கையும் இதுதான்! முடிந்தால் மறுத்துப் பார்!! வயிற்றில் மண் விழுந்து விட்டதே என்னும் வயிற்றெரிச்சல் கூட்டத்திற்கு நாம் விடுக்கும் வேண்டுகோளும் இதுதான்! ஆலயப் பாதுகாப்பு என்னும் போர்வையை எடுத்தெறிந்துவிட்டு, ஆண் மக்கள் என்று அடையாளங் காட்டி, உண்மையான தோற்றத்தோடு வெளியே வந்து மறுத்துப் பார்!! ஆமாம்! முடிந்தால் மறுத்துப்பார்!

கோயிலின் தூய்மையைக் குலைக்கும் துரிஞ்சல்களே! கோயிலைச் சுரண்டிக்கொழுக்கும் பெருச்சாளிகளே! உங்களின் பாட்டன் பூட்டனுக்காவது மீசை முளைத்திருக்கும் என்று நம்பினால் நேர்மையோடு வெளியில் வா! உன் பரம்பரையின் படை வரிசைகளைக் கையில் ஏந்தி வா! எழுந்து வா! போராட வா! முடியாதா? போகட்டும்!! ஆனால், உங்கள் முகமூடியைக் கிழித்தெறியும் வாதங்களை, வாதங்களால் மறுத்துப் பார்க்கவாவது வாருங்கள்! ஆமாம்! முடிந்தால் மறுத்துப் பார்க்க முந்துங்கள்!!

"ஆலயத்தின் அர்ச்சனை மொழியாக சமஸ்கிருதம் இருக்கவேண்டும்; ஏனென்றால், எங்கள் மொழி அப்போதுதான் வளம் பெறும்; எங்கள் வாழ்வும் அப்போதுதான் நலம்பெறும்; அதுமட்டுமா? தமிழ் மொழி அர்ச்சனைமொழி யென்னும் தகுதிக்கு வந்தால் தாங்குமா எங்கள் இதயம்; எத்தனை ஆயிரமாண்டுகளாக இந்தத் தமிழை எரியும் தீக்கு இரையாக்கும் திருத்தொண்டில் ஈடுபட்டு வருகிறோம்; அந்தத் திருப்பணி அழிந்திடச் சகிப்போமா?"

தர்ப்பைப் புல்லைக்கொண்டே இந்தத் தரையை ஏமாற்றும் தருக்கர்களே! நேரிடையாகவே உங்கள் நெஞ்சத்தில் கொஞ்சும் ஆவலைச் சொல்லிவிடுங்கள்!

"புராண இதிகாசங்களும் சாத்திர ஆகமங்களும் யாரை உயர்ந்த சாதியென்று கூறுகின்றன? எங்களைத்தானே; எனவே எங்களைத் தவிர, வேறு எவரையும் கோயிலின் குருக்கள் என நுழையவிடுவோமா? நாலாஞ்சாதிப் பயல்களா கோயிலில் நுழைந்து எங்கள் நாதனை அர்ச்சிப்பது? எங்கள் வருமானம் போகாதா? எங்கள் வாய்ப்பு நழுவாதா? எங்கள் வயிறு காயாதா?"

பிரம்மாவின் முகத்துப் பிறந்தவர்களே! பொய்யையும், புளுகையும் கொஞ்சநேரமாவது மறந்து, உங்கள் மனத்தில் இருப்பதைச் சொல்லித் தொலையுங்களேன்!!

"ஆலயத்தின் பொறுப்பு அரசாங்கத்திடமா? ஆகுமா இந்தக் கொடுமை? அடுக்குமா இந்த மடமை? எத்தனை ஆண்டுகளாக இறைவன் பெயரால், கோயில் சொத்துக்களை உண்டு கொழுத்து வருகிறோம்; அரசின் கண்காணிப்பு ஆலயத்தின் மீதென்றால் எங்கள் உடல் இளைக்காதா? 'அனுபவ பாத்தியம்' என்பார்களே அதெல்லாம் பொய்யா? எவனெவனோ கொடுத்த சொத்தை, நாங்கள் தின்றால், கேட்பதற்கு இவர்கள் யார்?"

பொய் வலை விரித்து மக்களை மயக்கி வாழும் புரோகிதக் கூட்டமே, அலைய விட்டிருக்கும் மனசாட்சியைக் கொஞ்ச நேரமாவது உங்கள் மனக் கூட்டில் அடைத்து, இப்படிச் சொல்லிப் பாருங்களேன்!!

முடியுமா உங்களால்? முடியாதென்றால், இதோ வாதத் திறத்தையே வாளாக்கி, உங்கள் வாலை நறுக்கியவர்கள் ஆதாரங்களை அள்ளி வீசுகிறார்களே, முடிந்தால் அவற்றை மறுத்துப் பார்!!

"ஓதலின் நன்றே வேதியர்க்கொழுக்கம்" ஔவை மூதாட்டியின் இந்த முதுமொழி, உங்கள் சாதிப் பித்திற்கு மூட்டிய தீ என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்!! நீங்கள்தான் உண்மையை ஒப்புக்கொள்வதே கிடையாதே. 'பிராமணருக்கு வேதம் ஓதுவதைக் காட்டிலும் நல்லொழுக்கம் சிறந்ததாகும்' என்று ஔவையார் ஏன் கூறவேண்டும். 'ஒழுக்கமாவது மண்ணாவது; பிறப்பால் நாங்கள்தான் உயர்ந்த சாதி; அதனாலேயே வேதம் ஓதும் தொழிலை விளையாட்டாக்கி வருகிறோம்' என்னும் திமிர் பிடித்த வாதத்திற்குக் கொடுத்த முதல் அடிதானே ஔவையின் கருத்து. அது மட்டுமா? ஒழுக்கமுள்ளவனுக்கே வேதம் ஓதும் தகுதியுண்டு என்பதைத்தானே ஔவையார் நாட்டிற்கு உணர்த்தியுள்ளார். மற்றவர்கள் கோயிலுக்குள் சென்றால் சானித்தியம் கெடும் என்றீர்களே, எப்படிக் கெடும்? உங்களுக்குக் கெடும் என்று யார் சொன்னது? "பார்ப்பனமாந்தர்காள்! பகர்வது கேண்மின்! உங்களைத் தவிர உள்ளே மற்றவர்கள் புகுந்தால் என்னுடைய தூய்மை கெடும்" என்று பகவான் உங்களிடம் சொன்னாரா? அல்லது, கருவறைக்குள் மற்றவர்கள் சென்றதால்

[4]

இக் கட்டுரைப்பகுதி தொடர்ந்து வரும். ஆரிய மாயையையும், புரட்டுக்களையும் காலச் சூழ்நிலையோடு புரட்டிக்காட்டும்; தேவாலயப் பாதுகாப்பு என்பதன் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தும்.

எந்தக் கோயில் கோபுரமாவது இடிந்து உங்கள் தலையில் வீழ்ந்து, மூளை மட்டும் சிதறி விழ, இப்போது தியாக பூமியில் கட்டுரை எழுதுகிறீர்களா?

உழைப்பால் உருவாக்கிய கோயிலில், உளியால் செதுக்கிய சிலையைக் கொண்டு போய் வைத்தவனுக்கு, உள்ளே நுழையும் தகுதியில்லை யென்றால், ஆண்டவன் அவ்வளவு கீழ்மகனா?

நாங்களா சொல்லுகிறோம்; ஆகமம் அப்படிச் சொல்லுகிறது என்கிறீர்களா? மெத்தச் சரி!! மேனியில் அழுக்குப்படாமல் மேதினியில் வாழும் மேல் சாதிகளே! வேதங்களைத் தவிர வேறொன்றையும் தொடக்கூடாது; கடலைத் தாண்டக் கூடாது; கப்பலில் ஏறக் கூடாது; பஞ்சகச்சத்தைத் தவிர படாடோபம் கூடாது; அர்ச்சனையைத் தவிர வேறு வேலையை அறியக்கூடாது என்பதுதானே உங்கள் ஆகம, வேத சாத்திர புராணங்கள் உங்களுக்குக் காட்டிய வழி!! வேதவிற்பன்னர்களே! ஆகமப்புலிகளே! பஞ்சாங்கத்தைத் தவிர வேறு 'பைல்'களையே நீங்கள் தொடுவதில்லை; ஆகமத்தைத் தவிர அய். ஏ. எஸ் வேலைகளை நீங்கள் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையா? பஞ்ச கச்சம் வைத்தா வேட்டி கட்டுகிறீர்கள்? வெளிநாட்டுத் தூதுவர்களாய் விமானத்தில் பறக்கலாமா? நைலான், நைலக்ஸ்களை மாமிகள் தொடலாமா? 'டைட் பேன்ட்டும், கூலிங்கிளாசும், புராணங்கள் காட்டிய புதுமைகள் தாமா? 'ஆற்றோரத்துப்புல்' ஆயுதமாயிற்றே உங்களுக்கு; பேனா பிடித்து எழுதலாமா?

ஆலயங் காக்க ஆர்ப்பரிப்போரே! இவைகள் எல்லாம் ஆகமங்களுக்கு மாறுபட்டவைதானே! இவைகள் எல்லாம் அனாச்சாரங்கள்தானே!! இவைகளால் சானித்தியம் சாகாதா? புனிதம் பாழ்படாதா? இவைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஏற்றுக்கொண்டு, வெள்ளைக்காரர்களாக நீங்கள் வீதியில் திரியலாம் என்றால், ஒழுக்கமுள்ளவன் ஆலயத்தின் உள்ளே சென்றால் என்ன? மின்சார விளக்குகளும் குளிர்பதன வசதிகளும் கோயிலுக்குள் நுழைந்த பிறகு உங்கள் ஆகமங்கள் அனுஷ்டானங்கள் எல்லாம் உங்களைக் காக்கும் வேலிகள் தானே!! எல்லாமே போகட்டும்!! ஆகமம்; அனுஷ்டானம் என்கிறீர்களே, அவையெல்லாம் உங்கள் 'அப்பன்கள்' எழுதி வைத்தது தானே; அவைகள் உங்களுக்குச் சாதகமானவைகளாகத் தானே இருக்கும்!! அதை வைத்துக் கொண்டு பூச்சாண்டி காட்டுவது பொருத்தந்தானா?

'திருதிரு' என்று 'விழித்தால் தெய்வம் துணைக்கு வராது!! என்ன உங்கள் பதில்!! எங்கே உங்கள் மறுப்பு? முடிந்தால் மறுத்துப் பாருங்கள்!!

“ஆலயத்தில் எத்தகைய திருத்தங்களைச் செய்தாலும், அது ஆகமத்துக்கு ஒத்ததா என்று பார்த்து, ஒத்ததாயின் ஏற்கவும், முரணானதாயின் கைவிடவும் வேண்டும்” என்று ஆணித்தரமாக எழுதிய அ. ப. தாஸ் அவர்களிடம் கேட்டுச் சொல்லுங்கள்! கோயிலுள் குளிர்பதன வசதியும், மின்சார விளக்குகளும் ஆகமத்துக்கு ஒத்தவைதானா?

அ. ப. தாஸ் அவர்களை நாமும் நேராகவே ஒன்றைக் கேட்க விரும்புகிறோம். ஆரிய இனத்தின் மூலமே ஜெர்மானியம் என்பார்களே, அந்த ஜெர்மானியத்தின் நேர் வாரிசே தாங்கள்தானா? கொஞ்சமாவது இந்நாட்டிற்குரிய மண் உங்கள் உடம்பில் ஒட்டிக்கொண்டிருக்கிறதா? இருந்திருக்குமேயானால், ஐயா ஆரியதாஸ் அவர்களே! “தமிழிலிருந்து ஹிந்து தத்துவத்தை எடுத்துவிட்டால் மிஞ்சுவது ஒன்றுமில்லை” என்று குறிப்பிட்டிருப்பீர்களா? உமக்குச் சரித்திர ஆதாரங்களைக் காட்டி விளக்குவதா? வரலாற்றுண்மைகளைக் கூறிப் புரியவைப்பதா? எல்லா வகையிலுமே தனித்தன்மை பூண்டு, உயர் தனிச் செம்மொழிஎன்று உலகப்பேரறிஞர்கள் பாராட்டிப் போற்றும் தமிழில் உமக்கு 'அ, ஆ' தெரிந்திருந்தால் இப்படிச் சொல்லியிருப்பீரா? முத்துக்களையும் மாணிக்கங்களையும் வாரி இரைப்பதால் குருடனுக்குக் கண்ணா தெரியப் போகின்றது!! சில உண்மைகள் முழுத் தேங்காயாகத்தான் இருக்கும். உருட்டியே பார்த்துப் பழக்கப்பட்டதுகளுக்கு, உள்ளே இருப்பதா தெரியும்; வெறும் மட்டையும் நாருந்தானே தெரியும்!!

ஒரு வகையில் உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஆரியப் பாதுகாப்பில் அங்கம் வகிப்போர், ஆரியக் குஞ்சுகளும், அவர்தம் அடியார்களும், தமிழ்ப் பகைவர்களுமே என்பதற்குத் தங்களை விட்டால் வேறு கதி எங்களுக்கு ஏது?

கோயிலில் தமிழ் அர்ச்சனை கூடாது என்பதற்கு உங்களின் நியாய வாதங்கள் யாவை? நேர்மையான, உண்மையான, அடிப்படையுள்ள ஆதாரங்களையாவது கூற வேண்டாம்; கூறவும் முடியாது!! ஆனால் முட்டாள்தனமாகவாவது சில வாதங்களையாவது, முரட்டுத்தனமான முடக்குவாதங்களையாவது சொல்லியிருக்கக் கூடாதா? 'தொண்டன்' என்ற புத்திசாலி “தமிழும், சமஸ்கிருதமும் இரு கண்களாகும்; எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற வாதத்துக்கே இடமில்லை” என்கிறார். இவருக்கு எங்கோ ஒரு மூலையில் தமிழ் உணர்வு இருந்துத் தொலைத்திருக்கிறது. நம்மைப் பொருத்தவரை, தொண்டன் அவர்கள், இவ்வாதத்தைச் சொல்லவேண்டியது ஆலயப் பாதுகாப்பு 'அரிப்பு'களுக்கே தவிர நமக்கல்ல என்பதுதான். தமிழும் சமஸ்கிருதமும் தகுதியால் ஒன்றானவை என்றால், கோயிலில் சமஸ்கிருதம் இடைக்காலத்தில் பிடித்துள்ள இடத்தை, இனிமேல் தமிழ் பெறட்டுமே!! இரண்டுந்தான் இரு கண்களாயிற்றே!! ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டாவது ஆலயப்பாதுகாப்பு அரைவேக்காடுகள் இதை மறுக்கவேண்டும்; ஆமாம்!

'யுகக் கணக்கில் அர்ச்சனைகள் சமஸ்கிருதத்தில்தான்' என்று பூணூலை உருவிவிடும் புரோகிதம் ராமச்சந்திர ஐயர் அவர்களோ, “தமிழர்ச்சனையைப் புகுத்துவதை ஹிந்துக்கள் அனைவரும் எதிர்த்தே தீருவர்” என்று ஆருடம் கணிக்கிறார். அர்ச்சுனன், தீர்த்த யாத்திரை செய்தபோது காவிரிப் பூம்பட்டினத்திலும், அழகர் கோயிலிலும் சமஸ்கிருதத்திலேயே அர்ச்சனை செய்தான் என்றும் கூறுகிறார்.

மகாபாரதமும், இராமாயணமும் முழுக்க முழுக்கக் கற்பனைக் கதைகளே என்பது பலரது வாதம். முதலில் புரோகிதம் ஐயங்கார் இதைத் தகர்க்க ஆதாரங்களைத் தேடி வெற்றி பெற்று அதன் பிறகு அர்ச்சுனனைச் சாட்சிக்கூண்டில் ஏற்றட்டும். அப்படியே அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை வந்ததாகவே இருக்கட்டும்! தமிழே தெரியாத

அடுத்த இதழில்:

'ஏனில்லை உரிமை?'

பொடியன் விமர்சிக்கிறார்!

அந்தத் ‘தனுவேந்தி’ தன்னுடைய ‘அம்மா பாஷை’யில்தானே அர்ச்சனை செய்ய முடியும். ஓட்டை ஆதாரங்களை வில்லாக நினைத்து உடைத்தெறிந்து, வீரராமனாக மாறப் பார்க்கும் ஐயங்கார் இது இராமாயணக் காலமல்ல என்பதை மட்டும் ஏனோ மறந்துவிட்டார். எப்படி இருந்தாலும், புரோகிதம் ஐயங்காரின் மனஉறுதியை மட்டில் நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. மானங் கெட்ட இனம் வாழும் நாட்டில், இராமச்சந்திர ஐயங்கார்களின் எண்ணிக்கை நாளொரு வண்ணமாக வளர்ந்து கொண்டுதான் வரும் போலும்!!

‘இரத்தச் சூடு’ என்பது எள் மூக்கு அளவாவது இருக்கும் தமிழன் திருப்பார்வைக்கு இதை வைக்கிறேன்: கண்களில் சிவப்பேறுகிறதா? கைகள் துடிக்கின்றனவா? தோள்கள் விம்முகின்றனவா? மீசை துடிக்கிறதா? என்று பார்க்க விரும்புகிறேன். இதைப் படிக்கும் நண்பர்களே! உங்களுக்கு எப்படி இருந்தது? அறிய விரும்புகிறேன்; அற்ப ஆசைதான்!! பீடிகை பலமாக இருக்கிறதே என்று நினைக்கும் நெஞ்சங்களே! ஒரு புரோகிதப் புரட்டனார் 1971-இல், தமிழகத்தில், தமிழ் ஏட்டில், தமிழில் எழுதுகிறார் “தமிழுக்கு ஆரிய மொழி சமஸ்கிருதத்தைப் போல தெய்வ சான்னியத்தியம் வளர்க்கும் ஆற்றல் இல்லை” என்று. “மகான்கள் தமிழில் ஸ்துதி செய்தார்களே யொழிய, தமிழ் அர்ச்சனை செய்யவில்லை. அர்ச்சனைக்கு பீஜாக்ஷரங்கள் உள்ளன. அதனால் தெய்வ ஸாந்நித்யம் வளரும்” என்கிறார் ஐயங்கார். தெய்வத்தை விட சமஸ்கிருதமே உயர்ந்தது; அதனால்தான் தெய்வத்திற்கே சான்னியத்தியம் கொடுக்கும் சக்தி சமஸ்கிருதத்திற்கு உண்டு என்னும் ஐயங்கார் தமிழை மட்டும் பழிக்கவில்லை; தெய்வத்தையும் சேர்த்தே பழிக்கிறார். ஆலயப் பாதுகாப்புச் சிங்கங்கள் ஐயங்காரை நோக்கித்தான் படை திரட்ட வேண்டும். எலும்பைப் பெண்ணாக்கிய தமிழ், கல்லைக் கலமாக்கிய தமிழ், முதலை வாய்ப் பிள்ளையை மீட்ட தமிழ்; ஆண்டவனைத் தன் பின்னால் வரச் செய்த தமிழ் என்றெல்லாம் தெய்வத்தையும் தமிழையும் இணைத்துப் பெருமைப்படும் தமிழ் பக்தர்களே! தெய்வத் தமிழ் என்றும், முருகனைத் தமிழ்த் தெய்வம் என்றும் பாமாலைசூட்டிப் பரவசப் படும் தமிழ்ப் பக்தர்களே! தமிழுக்குத்தெய்வ சான்னியத்தை உண்டாக்கும் சக்தி இல்லையென்று கூறும் சண்டாளப் புரோகிதருக்கு உங்கள் பதில் என்ன? ஆகமவிதி என்னும் பெயரால் ஆரிய மொழிக்கு நடைபாவாடை விரிக்கப் போகின்றீர்களா? கால காலமாகவே சமஸ்கிருத அர்ச்சனையென்று கதைவிடும் ஐயங்கார்களுக்கு உண்மைக்குத் திரையிடாதீர் என்று சில உண்மைகளை முன் வைத்து, முடிந்தால் மறுத்துப் பாருங்கள் என்று முழக்கம் விடுகிறோம்; தமிழ் பக்தர்களே! முடிந்தால் மறுத்துப் பார்க்கவாவது சொல்லுங்கள்.

பழனி முருகன் கோயிலில்உள்ள நவபாஷாண உருவச் சிலையைச் செய்தவர் போகர் என்பவர். அவருடைய மரபில் வந்த புலிப்பாணி பாத்திர உடையார்தான் அர்ச்சனை செய்துவந்தார். திருமலை நாயக்கருடைய தளவாய் ராமப்ப ஐயன் என்பவன் பழனிக்கு வந்து, அர்ச்சனை செய்த தமிழனின் கையால் பிரசாதம் வாங்க விரும்பாமல் அதிகாரத் துணையால் தமிழனின் கையில் இருந்த அர்ச்சனை உரிமையைப் பிடுங்கி ஐந்து பார்ப்பனர்களிடம் கொடுத்தான். இது நடந்தது சாலிவாகன சகாப்தம் 1366 கலியுக சகாப்தம் 4578 க்கு மேல் செல்லா நின்ற ஸ்ரீமுக வருஷம் தைமாதம் 16ஆம் தேதி திங்கட்கிழமையன்று.

ஐயங்கார் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இது நடந்தது. புரோகிதர் அவர்களே! 300 ஆண்டுகட்குமுன் வரை பழனியில் அர்ச்சகனாக இருந்தவன் தமிழன்; அர்ச்சனை மொழி தமிழ்; ஆதாரம்: ‘பழநி தண்டாயுதபாணி தேவஸ்தான வெளியீடான பழனித்தல வரலாறு’ என்ற புத்தகத்தில் காணப்படும் தளவாய் ராமப்ப ஐயன் கொடுத்த பட்டயத்தின் நகல். அப்போது பழனி முருகனிடம் தெய்வ சான்னித்தியம் இருந்ததா இல்லையா? 300 ஆண்டுகட்குமுன்னர் தமிழன் தமிழில்அர்ச்சனை செய்தானே அப்போது பழநியின் சான்னித்தியம் ஆதாரம் என்ன?

அது மட்டுமல்ல ஐயங்காரே! ஆரிய மொழி தமிழகத்தில் நுழைந்து வளர்ச்சி பெற்று தமிழ் இனத்தின் கழுத்தைப் பிடிக்கத் தொடங்கியது எப்போது? வாதத்திற்காகச் சொல்லுகிறேன். பத்தாயிரம் ஆண்டுகள் இருக்குமா? இன்னும் ஒன்றிரண்டைக் கூட்டிக் கொண்டாலும், கழித்துக் கொண்டாலும்கவலையில்லை. அந்த எல்லைக் கோட்டிற்கு முன்னால் தமிழகத்தில் தெய்வம் இருந்திருக்குமே; அந்தத் தெய்வத்தை அன்றைய தமிழன்தானே அர்ச்சனை செய்திருப்பான்; அவனும் தமிழில் தானே செய்திருப்பான்; ஏன் அப்போதுதான் ஆரியனும் இல்லை; ஆரியமொழியும் இல்லையே!! அப்போது தெய்வங்களுக்கு சக்தியே இருந்திருக்காதா? அப்போது தெய்வங்களுக்குச் சான்னித்தியம் இருந்திருக்காதா? எங்கே ஐயரே உம் விடை!! உம்மால் முடியாது விடை தர; தியாகபூமி மலர் திரட்டியவர்களையாவது சொல்லச் சொல்லுங்கள்!! எதுவும் வேண்டாம்! ஏழையின் சிரிப்பில் இருக்கும் இறைவனை ஏற்காத நாத்திகர்களே! தியாகபூமி தெய்வ நிந்தனையாளர்களே! 28-11-71 “காஞ்சி”யில் அண்ணன் புலவர் கோ. அண்ணாமலை அவர்களின் வாதங்களையாவது மறுத்துப் பாருங்கள்! மக்குகளாக பிண்ணாக்குச் செக்குகளாக நிற்க வேண்டாம்; முடிந்தால் மறுத்துப் பாருங்கள்!! •

எங்கள் தாய் மடியிலே எதிரியின் கால்களா?

எங்கள்தாய் மடியிலே
 எதிரியின் கால்களா?
எதிரியின் கால்களை
 இரண்டாக வெட்டுவோம்,
தர்மத்தாய் மண்ணிலே
 சண்டாளன் படைகளா?
சண்டாளன் படைகளைத்
 துண்டாக்கிப் போடுவோம்.
என்னென்று நினைத்துள்ளான்
 இந்திய மக்களை
பொன்மணிப் புருவடா
 பொங்கினால் புலியடா
சுண்டைக்காய் பயல்களைத்
 தும்பாக ஊதுவோம்
வெண்டைக்காய் படைகளின்
 விலாக்களை நொறுக்குவோம்
அமெரிக்கா வரட்டுமே
 அத்தோடு சீனமும்
தம்படை தரட்டுமே
 தவிடாக்கிக் காட்டுவோம்
தோட்டத்துள் ஒருமாடு
 சூடுவைத் தனுப்புவோம்
கூட்டுக்குள் ஒருநாகம்
 கொள்ளியில் பொசுக்குவோம்
போர்வெறிப் பேயனை
 நார்நாராய்க் கிழிக்காமல்
யார்நெஞ்சும் ஆறாது
 யார்கண்ணும் மூடாது

—கீ. க. இராசேந்திரன்

பணமழையில் நனைந்திடக் கனைழும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினல் உங்களுக்கு ஒருலட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம். எனவே

இன்றே வாங்குங்கள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்



5	இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10	மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50	நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ. 50,000
1000	ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.

மொத்தப் பரிசுத் தொகை ரூ.

14,00,000

குலுக்கல் நாள்: 31-12-71

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2

*4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.